தென்னிந்தியத் திருச்சபை - திருநெல்வேலி திருமண்டலம்

டோனாவூர் சேகரம்

120-வது ஸ்தோத்திரப் பண்டிகை

2013-ஆகஸ்ட் 13,14,15 (செவ்வாய், புதன், வியாழன்)

பாடல்களும்
ஆராதனை முறைமையும்

அன்புடன் :

திரு.D.ஆசீர்வாதம்
சேகர செயலர்

Rev.Mrs.மேரி வில்சன்
கௌரவ திருப்பணிவிடையாளர்

திரு.G.ஆண்ட்ரு குமார்
சேகர பொருளாளர்

Rev.D.வில்சன் சாலமோன்ராஜ்
சேகர தலைவர்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

ஆயத்த ஆராதனை

ஆரம்ப ஜெபம்

பாடல் – 1 கீதம் : 397

1. கர்த்தாவே, யுகயுகமாய்
எம் துணை ஆயினீர்
நீர் இன்னும் வரும் காலமாய்
எம் நம்பிக்கை ஆவீர்.

2. உம் ஆசனத்தின் நிழலே
பக்தர் அடைக்கலம்
உம் வன்மையுள்ள புயமே
நிச்சய கேடகம்.

3. பூலோகம் உருவாகியே
மலைகள் தோன்றுமுன்
சுயம்புவாய் என்றும் நீரே
மாறாப் பராபரன்.

4. ஆயிரம் ஆண்டு உமக்கு
ஓர் நாளைப் போலாமே
யுகங்கள் தேவரீருக்கு
ஓர் இமைக்கொப்பாமே.

5. சாவுக்குள்ளான மானிடர்
நிலைக்கவே மாட்டார்
உலர்ந்த பூவைப் போல் அவர்
உதிர்ந்து போகிறார்.

6. கர்த்தாவே, யுகயுகமாய்
எம் துணை ஆயினீர்
இக்கட்டில் நற் சகாயராய்
எம் நித்திய வீடாவீர்.

ஜெபம் பண்ணக்கடவோம்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே

பரமண்டலங்களிலிருக்கிற ....
ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

குரு : ஆண்டவரே எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.

மறு : *அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.*

குரு : தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்.

மறு : *ஆண்டவரே, எங்களுக்கு சகாயம் பண்ணத் தீவிரியும் (எல்லோரும் எழுந்து நிற்க)*

குரு : பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக

மறு : *ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.*

குரு : கர்த்தரை துதியுங்கள்

மறு : *கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.*

சங்கீதம் : 34

வேதபாடம்

விசுவாச பிரமாணம் :

வானத்தையும், பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன். அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியா-ளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு பாதாளத்தல் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிடத்தி லிருந்து எழுந்துருளினார். பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரி-

சத்திலே வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

குரு : கர்த்தர் உங்களோடிருப்பாராக

மறு : *அவர் உமது ஆவியோடும் இருப்பாராக*

குரு : ஜெபம் பண்ணக்கடவோம்.
கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்,
கிறிஸ்துவே எங்களுக்கு இரங்கும்,
கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற ....
தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ஆமென்.

குரு : கர்த்தாவே உம்முடைய இரக்கத்தை எங்களுக்கு காண்பியும்.

மறு : *உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச் செய்யும்.*

குரு : உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்.

மறு : *நீர் தெரிந்து கொண்ட ஜனத்தை சந்தோஷப் படுத்தும்.*

குரு : கர்த்தாவே உம்முடைய ஜனத்தை இரட்சியும்

மறு : *உம்முடைய சுதந்திரத்தை ஆசீர்வதியும்*

குரு : கர்த்தாவே எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்.

மறு : *தேவரீரேயல்லாமல் எங்களுக்காக யுத்தஞ் செய்வார் ஒருவருமில்லை.*

குரு : பராபரனே எங்கள் இருதயத்தைச் சுத்திகரியும்

மறு : *உம்முடைய பரிசுத்த ஆவியை எங்களிடத்தி லிருந்து எடுத்துக்கொள்ளாதேயும்.*

சகல பரிசுத்த விருப்பங்களுக்கும், சகல நல்லோசனைகளுக்கும், சகல நீதியான கிரியைகளுக்கும் காரண ராகிய கடவுளே! உலகம் தரக்கூடதா சமாதானத்தை உமது அடியாராகிய எங்களுக்குத் தந்தருளும், நாங்கள் உமது கற்பனைகளுக்குக் கீழ்படிந்து நடக்க மன உற்சாக முள்ளவர்களாயிருந்து, சத்துரு பயமில்லாமல் உம்மாலே காக்கப்பட்டு, ஆறுதலோடும் அமைதலோடும் எங்கள் ஜீவகாலத்தைப் போக்குவதற்கு எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

கர்த்தாவே, எங்கள் அந்தகாரம நீங்க வெளிச்சம் தந்து, இந்த இராத்திரியில் நேரிடும் சகல மோசங்களுக்கும், விக்கினங்களுக்கும் உமது மிகுந்த இரக்கத்தினால் எங்களை விலக்கிக் காக்க வேண்டுமென்று, உம்முடைய ஒரே குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் அன்பினிமித்தம் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

மகா அதிசயங்களைச் செய்கிற சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, எங்கள் அத்தயட்சர் மேலும், குருமார் மேலும், அவர்கள் விசாரனைக்கு ஒப்புவிக்கப்பட்ட எல்லாச் சபைகள் மேலும் ஆரோக்கியம் தருகிற உம்முடைய கிருபையுள்ள ஆவியை அனுப்பி, அவர்கள் உமக்கு உத்தமப் பிரியர்களாய் நடக்கும்படி உமது ஆசீர்வாதமாகிய பனி அவர்கள் மேல் ஓயாமல் பெய்யச் செய்தருளும். கர்த்தாவே, எங்கள் காரியக் கர்த்தரும் மத்தியஸ்தருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கு மகிமையுண்டாக இதைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

அறிவிப்புகள்

பாடல் - 2

கீதம் : 478

1. ஆராய்ந்து பாரும் கர்த்தரே
என் செய்கை யாவையும்
நீர் காணுமாறு காணவே
என்னில் பிரகாசியும்

2. ஆராயும் என்தன் உள்ளத்தை
நீர் சோதித்தறிவீர்
என் அந்தரங்க பாவத்தை
மா தெளிவாக்குவீர்

3. ஆராயும் சுடரொளியால்
துராசை தோன்றவும்
மெய் மனஸ்தாபம் அதனால்
உண்டாக்கியருளும்

4. ஆராயும் சிந்தை, யோசனை,
எவ்வகை நோக்கமும்
அசுத்த மனோபாவனை
உள்ளிந்திரியங்களும்

5. ஆராயும் மறைவிடத்தை
உம் தூயக் கண்ணினால்;
அரோசிப்பேன் என் பாவத்தை
உம் பேரருளினால்

6. இவ்வாறு நீர் ஆராய்கையில்
சாஷ்டாங்கம் பண்ணுவேன்;
உம் சரணார விந்தத்தில்
பணிந்து போற்றுவேன்.

பிரசங்கம்

காணிக்கைப் பாடல்

கீதம் : 393

பல்லவி :

ஆனந்தமே ஜெயா ஜெயா
அகமகிழ்ந்தனைவரும் பாடிடுவோம்.

அனுபல்லவி :

ஞானரட்சகர், நாதர் நமை – இந்த
நாள்வரை ஞாலமதினில் காத்தார் – புகழ் – ஆனந்தமே

சரணங்கள் :

1. சங்கு கனம், வளர் செங்கோலரசிவை
தளராதுள கிறிஸ்தானவராம்
எங்கள் ரட்சகரேசு நமை – வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால் – புகழ் – ஆனந்தமே

2. முந்து வருட மதினில் மனுடரில் வெகு
மோசகஸ்திகள் தனிலேயுழல,
தந்து நமக்குயிருடையுணவும் – வெகு
தயவுடன் இயேசு தற்காத்ததினால் – புகழ் – ஆனந்தமே

3. பஞ்சம் பசிக்கும் பட்டயத்துக்கும் வெகு கொடும்
பாழ் கொள்ளை நோய் விஷதோஷத்திற்கும்
தஞ்ச ரட்சகர் தவிர்த்து நமை – இத்
தரை தனில் குறை தணித்தாற்றியதால் – புகழ் – ஆனந்தமே

ஜெபம் & ஆசீர்வாதம்

நிறைவு கீதம் : பாடல் – 4 **கீதம் : 404**

1. களிப்புடன் கூடுவோம்
கர்த்தரை நாம் போற்றுவோம்
அவர் தயை என்றைக்கும்
தாசரோடு நிலைக்கும்.

2. ஆதி முதல் அவரே
நன்மை யாவும் செய்தாரே
அவர் தயை என்றைக்கும்
மாந்தர் மேலே சொரியும்.

3. இஸ்ரவேலைப் பேரித்தார்
நித்தம் வழி காட்டினார்

அவர் தயை என்றைக்கும்
மன்னா போலே சொரியும்.

4. வானம் பூமி புதிதாய்ச்
சிட்டிப்பாரே ஞானமாய்
அவர் தயை என்றைக்கும்
அதால் காணும் யாருக்கும்.

பரிசுத்த ஞானஸ்நான ஆராதனை

ஆரம்ப ஜெபம்

பாடல் – I

கீதம் : 228

1. நீ குருசில் மாண்ட கிறிஸ்துவை
அறிக்கை பண்ணவும்
அஞ்சாவண்ணம் உன் நெற்றிமேல்
சிலுவை வரைந்தோம்.

2. கிறிஸ்துவின் மாண்பைக் கூறவே
வெட்காத படிக்கும்
அவரின் நிந்தைக் குறிப்பை
உன்பேரில் தீட்டினோம்.

3. நீ கிறிஸ்துவின் செங்கொடிக்கீழ்
துணிந்து நிற்கவும்
சாமட்டும் நற்போராட்டத்தை
நடத்தும்படிக்கும்.

4. நீ கிறிஸ்துசென்ற பாதையில்
நேராகச் செல்லவும்
நிந்தை எண்ணாமல் சிலுவை
சகித்திடேறவும்.

5. கிறிஸ்துவின் அடையாளத்தை
சபை முன்னே பெற்றாய்

நீ அவர் குருசைச் சுமந்தால்
பொற்கிரீடம் பூணுவாய்.

ஞானஸ்நான ஆராதனை

வேதபாடம்

பாடல் – 2 கீதம் : 227

1. தம்மண்டை வந்த பாலரை
ஆசீர்வதித்த ரட்சகர்
இப்போதும் சிறுவர்களை
அணைக்கத் தயையுள்ளவர்.

2. குழந்தைகளுக்காகவும்
மரித்துயிர்த்த ஆண்டவர்
சிறந்த நன்மை வரமும்
தரக் காருணியமுள்ளவர்

3. ஆ இயேசுவே இப்பிள்ளையை
அணைத்து ஏந்தியருளும்
அளவில்லா சீர்வாதத்தை
அன்பாகத் தந்திரட்சியும்

பிரசங்கம்

விசுவாச அறிக்கை மற்றும் வாக்குறுதிகள்
லித்தானியா ஜெபம்
ஒவ்வொரு குழந்தை ஞானஸ்நானத்திற்குப் பிறகு பாடவேண்டியது.

பல்லவி :

***இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக் கொள்ளும்
கர்த்தாவே***

காணிக்கைப்பாடல்

பாடல் – 3

கீதம் : 506

பல்லவி :

தந்தேன் என்னை இயேசுவே
இந்த நேரமே உமக்கே

அனுபல்லவி :

உந்தனுக்கே ஊழியஞ்செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும் – தந்தேன்

சரணங்கள் :

1. ஜீவகாலம் முழுதும்
தேவப் பணி செய்திடுவேன்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தன் கரத்தினில் வைத்து – தந்தேன்

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய்ச் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா, வெல்லுவேன் – தந்தேன்

3. உந்தன் சித்தமே செய்வேன்
என்றன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே அங்கே இதோ! போகிறேன். – தந்தேன்

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டம் கூடிச் சூழ்ந்திட்டாலும்
அஷ்டத்திக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும் – தந்தேன்

5. ஒன்றுமில்லை நான் ஐயா!
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும் – தந்தேன்

நிறைவு கீதம்

பாடல் – 4

கீதம் : 229

1. யோர்தான் விட்டேறி, மனுஷ
குமாரன் ஜெபித்தார்
வானின்றப் போதிறங்கின
புறா உருக் கண்டார்

2. நல்லாவி அபிஷேகமாய்
அவர்மேல் தங்கினார்
என் நேச மைந்தன் என்தாய்ப்
பிதா விளம்பினார்.

3. அவ்வாறு ஸ்நானத்தால் புதுப்
பிறப்பை அடைந்தார்
மெய்த் தெய்வ புத்திரர் என்று
விஸ்வாசத்தால் காண்பார்.

4. கபடில்லாப் புறா தன்மை
தரிக்கப்படுவார்
நல்லாவி தங்கள் உள்ளத்தை
நடத்தப் பெறுவார்.

5. உம் ரத்த ஊற்றால் பாவத்தை
நீக்கின கிறிஸ்துவே
தூய்மையோரான தாசரைத்
தற்காத்துக் கொள்ளுமே.

6. சீர்கெட்ட லோகம் மீட்டோரே
பிதா ஆவியையும்
உம்மோடு ஏகராகவே
என்றென்றும் துதிப்போம்.

பரிசுத்த நற்கருணை ஆராதனை

ஆரம்ப ஜெபம்

பாடல் – 1 கீதம் : 1

1. ஆத்மமே, உன் ஆண்டவரின்
திருப்பாதம் பணிந்து
மீட்பு, சுகம், ஜீவன், அருள்
பெற்றதாலே துதித்து
அல்லேலூயா, என்றென்றைக்கும்
நித்திய நாதரைப் போற்று.

2. நம் பிதாக்கள் தாழ்வில் பெற்ற
தயை நன்மைக்காய்த் துதி
கோபங் கொண்டும் அருள் ஈயும்
என்றும் மாறாதோர் துதி
அல்லேலூயா, அவர் உண்மை
மா மகிமையாம் துதி.

3. தந்தைபோல் மா தயை உள்ளோர்
நீச மண்ணோர் நம்மையே
அன்பின் கரம் கொண்டு தாங்கி
மாற்றார் வீழ்த்திக் காப்பாரே
அல்லேலூயா, இன்னும் அவர்
அருள் விரிவானதே.

4. என்றும் நின்றவர் சமூகம்
போற்றும் தூதர் கூட்டமே
நாற்றிசையும் நின்றெழுந்து
பணிவீர் நீர் பக்தரே
அல்லேலூயா, அனைவோரும்
அன்பின் தெய்வம் போற்றுமே.

திருவிருந்து ஆராதனை முறைமை

அறுவடைப்பண்டிகை சுருக்க ஜெபம் :

எல்லாம் வல்ல நித்திய கடவுளே, பூமியின் நற்பலன் களை அதனதன் காலத்தில் எங்களுக்கு ஈவாக அளிக்கிறவரே நாங்கள் அவைகளை உமது மேன்மைக் கென்றும் தேவைப் பட்டவர்களின் உதவிக்கென்றும், எங்கள் நலத்திற்கென்றும் பயன்படுத்த அருள்புரியும். இந் நன்மையை விண்ணிலிருந்து இறங்கிவந்து உலகுக்கு உயிரளிக்கும் ஜீவ அப்பமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக தாழ்மையாய் வேண்டுகிறோம். அருக்கும் உமக்கும் தூய ஆவிக்கும் எல்லாப் புகழும் மேன்மையும் அனைத்துலகிலும் உண்டாவதாக ஆமென்.

வேத பாடங்கள்

பழைய ஏற்பாட்டு பாடம்	:	தோத்திரம் உண்டாவதாக.....
நிருப வாக்கியம்	:	தோத்திரம் உண்டாவதாக.....
சுவிசேஷ வாக்கியம்	:	மகிமை உண்டாவதாக.........

நிசேயா விசுவாசப் பிரமாணம்

அறிவிப்புகள்

பாடல் – 2 கீதம் : 244

1. என் மீட்பர் இயேசு கிறிஸ்துவே
உம் பாதத்தண்டை நிற்கிறேன்
திக்கற்ற பிள்ளை கெஞ்சவே
தள்ளாமல் சேர்த்துக் கொள்ளுமேன்.

2. என் கிரியைகள் எம்மாத்திரம்?
பிரயாசை எல்லாம் விருதா
உம்மாலேயே மெய்ப் பாக்கியம்
உண்டாகும் நேச ரட்சகா

3. உந்தன் சரீரம் ரத்தமும்
மெய்ப் பொருள் என்று அறிவேன்

உட்கொண்டன்பாய் அருந்தவும்
நான் பரவசமாகுவேன்.

4. மாசற்ற திரு ரத்தத்தை
கொண்டென்னைச் சுத்திகரியும்
மா திவ்விய ஜீவ அப்பத்தை
என் நெஞ்சத்தில் தந்தருளும்.

5. என் நாதா, உம் சரீரமே
மேலான திவ்விய போஜனம்
மாசற்ற உந்தன் ரத்தமே
மெய்யான பான பாக்கியம்.

காணிக்கைப் பாடல்

பாடல் – 3 கீதம் : 191

பல்லவி :

ஆத்துமமே, என் முழு உள்ளமே – உன்
ஆண்டவரைத் தொழு தேத்து, – இந்நாள் வரை
அன்பு வைத் தாதரித்த
ஆண்டவரைத் தொழு தேத்து

சரணங்கள் :

1. போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள – ஆத்துமமே

2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழியாத – ஆத்துமமே

3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத்தருளும், மேலான – ஆத்துமமே

4. வாதை, நோய், துன்பம், மாற்றி, அனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த – ஆத்துமமே

5. உற்றுணக் கிரங்கி உரிமை பராட்டும்
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் – ஆத்துமமே

6. துதி மிகுந்தேறத் தோத்தரி தினமே
இதயமே, உள்ளமே என் மனமே - ஆத்துமமே

ஜெபம்

ஜெபம் பண்ணக்கடவோம்

எங்கள் ஆறுதலின் ஆண்டவரே!

வறுமையில் வாடுவோர்! உறைவிடமற்றோர், விதவைகள் பிறர் நலத்திற்காகப் பயன்படுத்தப்படும் பெண்கள் ஊட்டச்சத்து குறையுள்ள சிறுவர், போரினாலும் பயங்கரவாதத் தினாலும் நிறம், இனம், வகுப்பு, ஜாதி, சமயம், பாரம்பரியம் ஆகிய வேற்றுமைகளின் விளைவாகப் பாதிக்கப்பட்டோருக்காக கேட்டருளும்.

மறுமொழி : ***கர்த்தாவே விண்ணப்பத்தை கேட்டருளும்.***

நீதியின் நாயகரே!

கல்லாதோர், கல்விக்கான வாய்ப்பு மறுக்கப்பட் டோர், பிறர்நலத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு அதை எதிர்த்து குரல் கொடுக்க வழியில்லாதோர் ஏன்? எப்படி? என்று கேட்கும் உரிமை மறுக்கப்பட்டோர். துன்புறுத்தப்படு- வோர், உடல் மற்றும் உள்ள நலம் குன்றியோர் ஆகியோருக்காகவும் மன்றாடுகிறோம்.

மறுமொழி : ***கர்த்தாவே விண்ணப்பத்தை கேட்டருளும்.***

எங்கள் தேற்றரவாளரே!

செய்யும் பணிக்கேற்ற ஊதியம் பெறாதோர், நிலமற்ற தொழிலாளர்கள், குழந்தை தொழிலாளர்கள், கொத்தடிமை தொழிலாளர்கள், உடமைகள் பறிக்கப்பட்டோர், தவறான குற்றச் சாட்டுகளுக்கு உட்பட்டோர், அநியாயமாக நடத்தப்படுவோர், ஆகியோருக்காவும் மன்றாடுகிறோம்.

மறுமொழி : ***கர்த்தாவே விண்ணப்பத்தை கேட்டருளும்.***

அனைத்து அதிகாரமுடைய எங்கள் ஆண்டவரே!

எங்கள் தலைவர்கள் சிறப்பாக குடியரசு தலைவர், பிரதம அமைச்சர், மாநில ஆளுநர், மாநில முதலமைச்சர் ஆகியோரின் சமத்துவமும் நீதியும் உள்ள சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் உமது கிருபை அவர்களைத் தாங்க மன்றாடுகின்றோம்.

மறுமொழி : ***கர்த்தாவே விண்ணப்பத்தை கேட்டருளும்.***

திருச்சபையின் தலைவரே!

எங்கள் தலைமைப் பேராயர், எங்கள் பேராயர், வட இந்திய திருச்சபையின் தலைமை பேராயர், மார்த்தோமா திருச்சபையின் தலைமைப் பேராயர் மற்றும் அனைத்து பேராயர்கள், குருமார்கள் உதவி குருமார்கள், சபை ஊழியர்கள் ஆகியோருக்காக வேண்டுகிறோம். திருச்சபை இவ்வுலகில் நடைபெற இருக்கும் உமது ஆட்சிக்கு அடையாளமாக விளங்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

மறுமொழி : ***கர்த்தாவே விண்ணப்பத்தை கேட்டருளும்.***

மனதுருக்கத்தின் ஆண்டவரே!

சுகவீனமாய் இருப்போர் மரணத்தருவாயில் இருப்போர், உற்றாரை இழக்கக்கொடுத்தோர், கடன் தொல்லையினால் வாடு-வோர், விவகாரத்தினால் அமைதியிழந்தோர் ஆகியோருக்காக மன்றாடுகிறோம்.

மறுமொழி : ***கர்த்தாவே விண்ணப்பத்தை கேட்டருளும்.***

குரு : சர்வ வல்லமையுள்ள நித்திய கடவுளே, திருச் சபையின் முழு சரீரத்தையும் உமது ஆவியான

வரால் ஆண்டு பரிசுத்தப்படுத்துகிறவரே, உமது திருச்சபையில் எல்லா நிலையிலுள்ள மனிதர்களுக்காக உமது சன்னதியில் நாங்கள் ஏறெடுத்த விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் அங்கீகரித்தருளும், ஒவ்வொரு அங்கத்தினரும் தன் தன் அழைப்பிலும் பணிவிடையிலும் உண்மையோடும் தெய்வ பக்த்தியோடும் உமக்கு ஊழியஞ்செய்ய அநுக்கிரகிக்க வேண்டுமென்று எங்கள் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

குரு : *அப்பம் பிட்குதல்.*

நற்கருணை பாடல்

பாடல் – 4

1. When peace, like a river, attendeth my way,
   when sorrows like sea billows roll;
   whatever my lot, thou hast taught me to say,
   It is well, it is well with my soul.

Refrain:

It is well with my soul,
it is well, it is well with my soul.

2. Though Satan should buffet, though trials should come,
   let this blest assurance control,
   that Christ has regarded my helpless estate,
   and hath shed his own blood for my soul.

Refrain :

It is well with my soul,
it is well, it is well with my soul.

3. My sin, oh, the bliss of this glorious thought!
My sin, not in part but the whole,
is nailed to the cross, and I bear it no more,
praise the Lord, praise the Lord, O my soul!

Refrain:

It is well with my soul,
it is well, it is well with my soul.

4. And, Lord, haste the day when my faith shall be sight,
the clouds be rolled back as a scroll;
the trump shall resound, and the Lord shall descend,
even so, it is well with my soul.

Refrain:

It is well with my soul,
it is well, it is well with my soul.

பாடல் – 5 **கீதம் : 408**

1. என் மேய்ப்பர் இயேசு கிறிஸ்துதான்
நான் தாழ்ச்சியடையேனே
ஆட்கொண்டோர் சொந்தமான நான்
குறையடைகிலேனே.

2. ஜீவாற்றில் ஓடும் தண்ணீரால்
என் ஆத்மத் தாகம் தீர்ப்பார்
மெய் மன்னாவாம் தம் வார்த்தையால்
நல் மேய்ச்சல் எனக்கீவார்.

3. நான் பாதை விட்டு ஓடுங்கால்
அன்பாகத் தேடிப் பார்ப்பார்
தோள்மீதில் ஏற்றிக் காப்பதால்
மகா சந்தோஷங் கொள்வார்.

4. சா நிழல் பள்ளத்தாக்கிலே
நான் போக நேரிட்டாலும்
உன் அன்பின் கோலைப் பற்றவே
அதே என் வழி காட்டும்

5. இவ்வேழைக்கும் ஓர் பந்தியை
பகைஞர்க்கெதிர் வைத்தீர்
உம்மாவியால் என் சிரசை
தைலாபிஷேகம் செய்வீர்.

6. என் ஆயுள் எல்லாம் என் பாத்திரம்
நிரம்பி வழிந்தோடும்
ஜீவாற்றின் நீரால் என்னுள்ளம்
நிறைந்து பொங்கிப்பாயும்

7. என் ஜீவ காலம் முற்றிலும்
கடாட்சம் பெற்று வாழ்வேன்
கர்த்தாவின் வீட்டில் என்றைக்கும்
நான் தங்கிப் பூரிப்பாவேன்.

குரு : கிறிஸ்துவின் சரீரமும் ....

சர்வ வல்லமையுள்ள........................ வேண்டிகொள் கிறோம். ஆமென்.

பாடல் : ஆமென் எங்கள் தேவனுக்கு

ஜெபம் & ஆசீர்வாதம்

நிறைவுப் பாடல் **கீதம் : 482**

1. அன்போடு எம்மைப் போஷிக்கும்
பெத்தேலின் தெய்வமே
முன்னோரையும் நடத்தினீர்
கஷ்ட இவ்வாழ்விலே.

2. கிருபாசனமுன் படைப்போம்
எம் ஜெபம் ஸ்தோத்ரமும்
தலைமுறையாய்த் தேவரீர்
எம் தெய்வமாயிரும்

3. மயங்கும் ஜீவ பாதையில்
மெய்ப் பாதை காட்டிடும்
அன்றன்றுமே நீர் தருவீர்
ஆகாரம் வஸ்திரமும்.

4. இஜ்ஜீவிய ஓட்டம் முடிந்து
பிதாவின் வீட்டினில்
சேர்ந்திளைப்பாறுமளவும்
காப்பீர் உம் மறைவில்

5. இவ்வாறான பேர் நன்மைக்காய்ப்
பணி ந்து கெஞ்சினோம்
நீர் தாம் எம் தெய்வம் என்றுமே
சுதந்தரமுமாம்.

பிரதான பண்டிகை ஆராதனை

ஆரம்ப ஜெபம்

பாடல் – 1 கீதம் : 361

1. ஆ, என்னில் நூறு வாயும் நாவும்
இருந்தால், கர்த்தர் எனக்கு
அன்பாகச் செய்த நன்மையாவும்
அவைகளால் பிரசங்கித்து
துதிகளோடே சொல்லுவேன்,
ஓயா தொனியாய் பாடுவேன்

2. என் சத்தம் வானமளவாக
போய் எட்ட வேண்டும் என்கிறேன்
கர்த்தாவைப் போற்ற வாஞ்சையாக
என் ரத்தம் பொங்க ஆசிப்பேன்
ஒவ்வொரு மூச்சும் நாடியும்
துதியும் பாட்டுமாகவும்.

3. ஆ, என்னில் சோம்பலாயிராதே
என் உள்ளமே நன்றாய் விழி
கர்த்தாவை நோக்கி ஓய்வில்லாதே
கருத்துடனே ஸ்தோத்திரி
ஸ்தோத்திரி, என் ஆவியே
ஸ்தோத்திரி, என் தேகமே.

4. வனத்திலுள்ள பச்சையான
எல்லாவித இலைகளே
வெளியில் பூக்கும் அந்தமான
மலர்களின் ஏராளமே
என்னோடே கூட நீங்களும்
அசைந்திசைந்து போற்றவும்

5. கர்த்தரால் ஜீவன் பெற்றிருக்கும்
கணகக்கில்லா உயிர்களே
பணிந்து போற்ற உங்களுக்கும்
எந்நேரமும் அடுக்குமே
துதியாய் உங்கள் சத்தமும்
ஓர்மித் தெழும்பி ஏறவும்.

குரு, மறுமொழி

குரு : பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்னமும், கோடை காலமும் மாரி காலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை.

மறு : *இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்.*

குரு : உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருக ஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

மறு : *இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம் இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம் பண்ணுவேன். அதின் ஆகாரத்தை நான் ஆசீர்வதித்து வருவேன் அதின் ஏழைகளை நான் அப்பத்தினால் திருப்தியாக்குவேன்.*

குரு : இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடு கிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டு

மென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடு காத்திருக்கிறான்.

மறு : *நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள் கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.*

பாவ அறிக்கை

குரு : நாம் முழங்காற்படியிட்டு மௌனமாய் நம்மை நாமே சோதித்தறிவோமாக.

(சற்றுநேர அமைதி)

குரு : சர்வ வல்லமையுள்ள கடவுளிடத்தில் நாம் நமது பாவங்களை மனத் தாழ்மையோடு அறிக்கையிடு -வோம்.

மறு : *எங்கள் தந்தையாம் கடவுளே நினைவினாலும், வார்த்தையினாலும், செய்கையினாலும் உமக்கு விரோதமாய் பாவம் செய்திருக்கிறோம். முழு மனதோடு நாங்கள் உம்மை நேசிக்கவில்லை எங்களிடத்தில் நாங்கள் அன்பு கூறுவது போல் அயலாரிடத்தில் அன்பு கூறவில்லை. எங்கள் மேல் இரக்கமாயிருக்க உம்மை வேண்டிக் கொள்ளு கிறோம். எங்கள் பாவ அழுக்கை நீக்கி எங்களை சுத்திகரியும். எங்கள் குற்றங்களை விட்டுவிட எங்களுக்கு உதவி புரியும். எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.*

பேராயர் :

சர்வ வல்லமையும், மிகுந்த இரக்கமுள்ள ஆண்டவர் பாவ மன்னிப்பையும், பாவ நிவர்த்தியையும் உங்களுக்கு கட்டளையிட்டருளி வாழ்க்கையை சீர்படுத்துவதற்கான காலத்-தையும், தமது பரிசுத்த ஆவியின் கிருபையையும் தேற்ற-ரவையும் தந்தருளுவாராக. ஆமென்.

(யாவரும் சேர்ந்து)

பரமண்டலங்களிலிருக்கிற............ உம்முடையவைகளே ஆமென்.

குரு : ஆண்டவரே, எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.

மறு : *அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.*

குரு : தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்.

மறு : *ஆண்டவரே, எங்களுக்கு சகாயம் பண்ணத் தீவிரியும்.*

(எல்லோரும் எழுந்து நிற்க)

குரு : பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

மறு : *ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.*

குரு : கர்த்தரை துதியுங்கள்.

மறு : *கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதா.*

சங்கீதம் : 67 மாறி மாறி வாசிப்போம்

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக. ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.

வேத பாடங்கள் : உபாகமம் 8:7–18

மூன்று வாலிபர் கீதம்

கர்த்தரை சிருஷ்டித்த சகல சிருஷ்டிகளே கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென் றைக்கும் அவரைத் துதியுங்கள்.

கர்த்தருடைய தூதர்களே ....

வானங்களே ....

ஆகாய வரிவின் மேலுள்ள ஜனங்களே ....

கர்த்தருடைய சகல வல்லமைகளே ....

சூரிய சந்திரரே ....

வானத்தின் நட்சத்திரங்களே ....

மழையே, பனியே ....

தேவனுடைய காற்றுகளே ....

அக்கினியே, உஷ்ணமே ....

மாரிகாலமே, கோடை காலமே ....

மூடுபனியே, ஆலாங்கட்டியே ....

பனிகட்டியே, குளிரே ....

உறைந்த நீரே உறைந்த பனியே ....

இரவே, பகலே ....

ஒளியே, இருளே ....

மின்னல்களே, மேகங்களே ....

பூமியானது கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதிக்கக்கடவது.

மலைகளே, குன்றுகளே ....

பூமியில் முளைத்தெழும்பும் எல்லாத் தாவரங்களே........ ....

நீரூற்றுகளே ....

சமுத்திரங்களே, நதிகளே ....

மகா மச்சங்களே, நீர்வாழும் சகல ஜெந்துக்களே ....

ஆகாயத்துச் சகல பறவைகளே ....

காட்டு மிருகங்களே, நாட்டு மிருகங்களே ....

மனுமக்களே ....

இஸ்ரவேலர் கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதிக்கக்கடவர்கள்.

கர்த்தருடைய ஆசாரியர்களே ....

கர்த்தருடைய ஊழியக்காரரே ....

நீதிமான்களின் ஆவிகளே, ஆத்துமாக்களே ....

பரிசுத்தமும் தாழ்மையுமுள்ள இருதயமுடைய மனிதர்களே ....

அனனியாவே, அசரியாவே, மிகாவேலே கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

ஆதியிலும், இப்பொழுதும், எப்பொழுதுமான சதாகாலங் களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.

மத்தேயு 6:24-34

பாடல் – 2 **கீதம் : 364**

1. விண் மண்ணை ஆளும் கர்த்தரே,
எவ்வாறு உம்மை நேசித்தே
துதிப்போம்? நன்மையாவுமே
நீர் ஈகிறீர்.

2. உம் அன்பைக் கூறும் மாரியும்
வெய்யோனின் செம்பொன் காந்தியும்,
பூ, கனி, விளை, பயிரும்,
எல்லாம் ஈந்தீர்.

3. என் ஜீவன், சுகம், பெலனும்
இல் வாழ்க்கை, சமாதானமும்
பூலோக ஆசீர்வாதமும்
எல்லாம் ஈந்தீர்.

4. சீர் கெட்ட மாந்தர் மீள நீர்
உம் ஏக மைந்தனைத் தந்தீர்
மேலும் தயாள தேவரீர்
எல்லாம் ஈந்தீர்.

5. தம் ஜீவன், அன்பு, பெலனை
ஏழாம் மா நல் வரங்களை
பொழியும் தூய ஆவியை
அருள்கிறீர்.

6. மன்னிப்பும் மீட்பும் அடைந்தோம்
மேலான நம்பிக்கை பெற்றோம்
பிதாவே பதில் என் செய்வோம்?
எல்லாம் ஈந்தீர்.

7. தன்னயம் நஷ்டமாகுமே
உமக்களிக்கும் யாவுமே
குன்றாத செல்வம் கர்த்தரே
எல்லாம் ஈந்தீர்.

8. தர்மத்தைக் கடன் என்பதாய்
பதில் ஈவீர் பன்மடங்காய்
இக்காணிக்கையைத் தயவாய்
ஏற்றுக்கொள்வீர்.

9. உம்மாலே பெற்றோம் யாவையும்
தர்மத்தைச் செய்ய ஆசையும்
உம்மோடு நாங்கள் வாழவும்
அருள் செய்வீர்.

விசுவாசப்பிரமாணம்

வானத்தையும், பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன். அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்து பிறந்தார் பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார் மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார் பரமண்டலத்துக் கேறி சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொது வாயிருக்கிற பரிசுத்த சபையும் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் பாவமன்னிப்பும் சரீரம் உயிர்த்தெழுதலும் நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

குரு : கர்த்தர் உங்களோடு இருப்பாராக

மறு : *அவர் உமது ஆவியோடும் இருப்பாராக*

குரு : ஜெபம் பண்ணக்கடவோம்

நாம் நமது துதிகளை ஏறெடுப்போம்

குரு : ஆதியில் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்து மாறி மாறி வருங் காலங்களையும் அனுகூலமான மழைகளையும் கட்டளையிட்டுப் பூமியைப் பராமரிக் -கிற நேசரே

மறு : *உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே*

குரு : நீர் உண்டாக்கின மனுக்குலத்துக்குப் பூலோகத்தை சுதந்திரமாகத் தந்தருளிய வள்ளலே.

மறு : *உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே*

குரு : சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் வேண்டியதெல்லா வற்றையும் தந்து எங்களை காப்பாற்றி வருகிற தந்தையே,

மறு : *உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே*

குரு : அறுப்புக் காலத்துக்குரிய சந்தோஷத்தை தந்து எங்களைக் களிகூரப் பண்ணுகிற அருள்நாதனே.

மறு : *உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே*

குரு : டோனாவூர் . சேகர 120-வது ஸ்தோத்திரப் பண்டிகையை ஆனந்த களிப்புடன் ஆசரிக்க அருள்கூர்ந்த கர்த்தாவே.

மறு : *உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே*

குரு : டோனாவூர் சேகரத்தில் இயங்கி வரும் பள்ளிக் கூடங்களின் வளர்ச்சியில் கருணை காட்டியே அன்பு கடவுளே

மறு : *உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே*

குரு : உம் திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை எங்களுக்கு ஜீவ அப்பமாகத் தந்து எங்களை உயிர்ப்பிக்கிற ஜீவனுள்ள தேவனே.

மறு : *உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே*

குரு : அவர் மூலமாய் நித்திய ஜீவனைப் பற்றிய நன்னம்பிக்கையை எங்களுக்கு அருளிச் செய்யும் நித்தியரே.

மறு : *உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே*

நமது விண்ணப்பங்களை ஏறெடுப்போமாக

1. தேவரீர் உம்முடைய அடியாராகிய எங்களுக்குச் செவி சாய்த்து, நாங்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எங்களை ஆசீர்வதித்து காப்பாற்றியருள வேண்டுமென்று

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

2. தேவரீர் மழைகளையும் நல்ல காலங்களையும் கொடுத்து எங்களையும் மற்றெல்லா மனிதரையும் பேரித்தருள வேண்டுமென்று

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

3. சமுசாரிகள் விதைக்கிற விதைகளை ஆசீர்வதித்து அவைகள் முளைக்கவும் ஏற்ற காலத்தில் நல்ல பலனைக் கொடுக்கவும் பற்பல தொழில் புரிவோர்களின் தேவைகள் சந்திக்கப் படவும், தொழில் விருத்தியடையவும் கிருபை செய் தருள்ள வேண்டுமென்று

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

4. எங்கள் ஆடு, மாடுகளையும் பட்சி பறவைகளையும் காப்பாற்றி அவைகள் பெருகும்படி நீர் கிருபை செய்தருள வேண்டுமென்று

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

5. எங்கள் பகுதியில் நிலவும் வறுமையும், வேலையில்லா திண்டாட்டமும் நீங்கி, பீடி சுற்றும்தொழில் மாறி புதிய தொழில் வளம் ஏற்படவும் மக்கள் திருப்த்தியோடு வாழவும் கிருபை செய்ய வேண்டுமென்று

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

6. தேவரீர் தந்தருளிய நன்மைகளை நாங்கள் ஏற்றவாறு அனுபவிக்கும்படி, நன்றியறிதலுள்ள இருதயங்களை எங்களுக்குக் கட்டளையிட்டருள வேண்டுமென்று

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

7. பசியாயிருக்கிறவர்களுக்காகவும் ஒன்றுமில்லாதவர் களுக்காகவும் தேவரீர் பரிதபித்து அவர்களுக்கு வேண்டிய தெல்லாவற்றையும் கட்டளையிட்டருள வேண்டுமென்று

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

8. நாங்கள் பிறருக்கு நன்மை செய்து உம்மை மகிமைப் படுத்தும்படி தேவரீர் எங்களுக்கு நல்மனதைக் கொடுக்க வேண்டுமென்று

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

9. சபை ஊழியர்கள், குருமார்கள், பேராயர்கள் யாவரும் உண்மையோடும், மன உற்சாகத்தோடும் உமக்கு ஊழியம் செய்யும்படி அவர்களை உம்முடைய ஆவியினாலே நடத்தியருள வேண்டுமென்று

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

10. உமது இரத்தத்தால் மீட்கப்பட்ட திருச்சபை தேவ பக்த்தி யோடு உம்மை சேவித்து உலக மக்களுக்கு ஒளியாய் இருக்கும்படி தேவரீர் உமது சத்தியத்தால் அதை பிரகாசிப் பித்தருள வேண்டுமென்று

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

11. எங்கள் எதிர்கால சிறப்பான செயல் திட்டங்களையும் ஆக்கப் பூர்வமான பணிகளையும் ஏற்ற காலத்தில் நிறை வேற்ற உமது வழிநடத்துதலை தந்து அருள் செய்ய வேண்டுமென்று.

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

12. பற்பல இடங்களில் வாழும் டோனாவூர் சேகரத்தின் மக்கள் கர்த்தருக்கு சாட்சியாகவும் நிறைவான வாழ்வோடும் சுகித்திருக்க கிருபை செய்ய வேண்டுமென்று.

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே

இரக்கமுள்ள தேவனே, உமது கையைத்திறந்து பூமியைச் செழிப்பாக்கி, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தி செய்து, ஆசீர்வதித்து வருகிறீரே, தேவரீர் கிருபைகூர்ந்து செய்கிற எல்லா நன்மைகளுக்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். எங்களுக்கு சரீர சம்ரட்சணையாகவும், விசேஷமாய் எங்கள் ஆத்துமாக்களுக்கு ஞானகாரமாகவும், தேவரீர் ஏற்படுத்தியிருக்கிற எல்லா நன்மைகளுக்காகவும், உம்மைப் போற்றுகிறோம். கர்த்தாவே நாங்கள் கடைசியில் உமது பரம ராஜ்யத்தில் சேரத் தகுந்தவர்களாயிருக்கும்படி நாளுக்கு நாள் உமது கிருபையை அடைந்து தேறவும், உமது திருச்சபையில் நிலைத்திருந்து பூரணப்படவும் அருள்புரிய வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் மன்றாடுகிறோம். ஆமென்

பாடகர் சிறப்பு பாடல் :

1. Come, ye thankful people, come,
Raise the song of harvest home;
All is safely gathered in,
Ere the winter storms begin.
God our Maker doth provide

For our wants to be supplied;
Come to God's own temple, come,
Raise the song of harvest home.

2. All the world is God's own field,
Fruit as praise to God we yield;
Wheat and tares together sown
Are to joy or sorrow grown;
First the blade and then the ear,
Then the full corn shall appear;
Lord of harvest, grant that we
Wholesome grain and pure may be.

3. For the Lord our God shall come,
And shall take the harvest home;
From the field shall in that day
All offenses purge away,
Giving angels charge at last
In the fire the tares to cast;
But the fruitful ears to store
In the garner evermore.

4. Even so, Lord, quickly come,
Bring thy final harvest home;
Gather thou thy people in,
Free from sorrow, free from sin,
There, forever purified,
In thy presence to abide;
Come, with all thine angels, come,
Raise the glorious harvest home.

அறிவிப்புகள்

பாடல் - 3 கீதம் : 359

1. வயல் உழுது தூவி
நல் விதை விதைப்போம்
கர்த்தாவின் கரம் அதை
விளையச் செய்யுமாம்
அந்தந்தக் காலம் ஈவார்
நற்பனி மழையும்
சீதோஷ்ணம் வெயில் காற்று
அறுப்பு வரையும்

நல் ஈவுகள் யாவும்
ஈபவர் கர்த்தரே
துதிப்போம் என்றும் துதிப்போம்
அவர் மா அன்பையே.

2. விண் வானம் ஆழி பூமி
அவரே சிருஷ்டித்தார்
புஷ்பாதி விண் நட்சத்திரம்
பாங்காய் அமைக்கிறார்
அடக்கி ஆழி காற்று
உண்பிப்பார் பட்சிகள்
போஷிப்பிப்பார் அன்றன்றும்
மைந்தராம் மாந்தர்கள்

3. நல் ஈவு பலன் பாக்கியம்
விதைப்பு அறுப்பை
ஜீவன் சுகம் ஆகாரம்
தரும் பிதா உம்மைத்
துதிப்போம் அன்பாய் ஏற்பீர்
படைக்கும் காணிக்கை
யாவிலும் மேலாய்க் கேட்கும்
தாழ்மையாம் உள்ளத்தை

காணிக்கைப் பாடல்

பாடல் – 1 **கீதம் : 394**

பல்லவி

எந்நாளுமே துதிப்பாய் – என்னாத்துமாவே, நீ
எந்நாளுமே துதிப்பாய்!

அனுபல்லவி

இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவும் மறவாது – எந்நாளுமே

சரணங்கள்

1. பாவங்கள் எத்தனையோ? – நினையா திருந்தாருன்
பாவங்கள் எத்தனையோ?

பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மகா தயவை எண்ணி, – எந்நாளுமே

2. எத்தனையோ கிருபை உன்னுயிர்க்குச் செய்தாரே
எத்தனையோ கிருபை?
நித்தமுனை முடி சூட்டினதுமன்றி
நித்தியமான ஜீவனை மீட்டதால் – எந்நாளுமே

3. நன்மையாலுன் வாயை – நிறைத்தாரே பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை
உன் வயது கழுகைப்போல் பலங்கொண்டு
ஓங்கு இளமைபோலாகவே செய்ததால் – எந்நாளுமே

4. பூமிக்கும் வானத்துக்கும் – உள்ள தூரம் போலவே
பூமிக்கும் வானத்துக்கும்
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே, சத்திய மேயிது – எந்நாளுமே

5. மன்னிப்பு மாட்சிமையாம் – மா தேவனருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்
எண்ணுவாயோ கிழக்கு மேற்கின் தூரமே?
எண்ணில் உன் பாவம் அகன்றத்தூரமே – எந்நாளுமே

6. தந்தைதன் பிள்ளைகட்கு, தயவோடிரங்கானோ
தந்தைதன் பிள்ளைகட்கு?
எந்த வேளையும் அவரோடு தங்கினால்,
ஏற்றிப் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே – எந்நாளுமே

காணிக்கை ஆசீர்வதித்தல்

(பேராயர் முன் சொல்ல சபையார் சேர்ந்து பின்வரும் ஜெபத்தை சொல்லுவார்கள்)

சர்வ வல்லமையும் இரக்கமுள்ள பிதாவே இந்த வருஷத்தில் தேவரீர் எங்களுக்கு அருளிச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் – அதிக நன்றியறிதலோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். விசேஷமாய் – தேவரீர் மனுக்குலத்தை விருத்தியடையச் செய்து – எங்கள்

மந்தைகளைக் காப்பாற்றி - பூமி ஏற்ற காலத்தில் தன்பலனைத் தரும்படி கிருபை செய்ததற்காக உம்மை துதிக்கிறோம். இந்த நன்மைகளை நாங்கள் நினைவுகூர்ந்து - நீர் அருளிச்செய்த வகைகளின் ஒரு பாகத்தை கொண்டுவந்து - சந்தோஷம் நிறைந்தவர்களாய் - தேவரீருக்கு மனதாரச் சமர்ப்பிக்கிறோம். கர்த்தாவே - வரப்போகிற வருஷத்திலும் எங்களை ஆசீர்வதித் தருளும் - இந்த காணிக்கைகளை படைக்கிற நாங்கள் - எங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையும் - உமக்கு ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்து - எங்கள் வாழ்நாளெல்லாம் - உம்மை உண்மை யுள்ளவர்களாய்ச் சேவிக்கும்படி - தேவரீர் எங்களுக்கு கிருபை செய்தருள வேண்டுமென்று - எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் - உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம் - அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும் - எல்லாக் கனமும் மேன்மையும் மகிமையும் - என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமென்.

சுருக்க ஜெபம்

பூமியில் தானியத்தை விளைவித்து உமது நன்மையால் வருஷத்தை முடிசூட்டுகிற சர்வ வல்லமையுள்ள கடவுளே, நாங்கள் விதைக்கிற விதையை நீர் ஆசீர்வதித்து நல்ல பலனைத் தந்தருளின கிருபைக்காக உமக்கு மனத் தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இம்மையில் எங்கள் பேரிப்புக்காக அத்தானியம் எங்கள் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்ட தேவரீர் கிருபை செய்தது போல மறுமையில் நாங்களும் நல்ல தானியமாக உமது பரம களஞ்சியத்தில் சேர்க்கப்பட அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

முழங்காலில் நின்று பாடுவது (கீதம் 593)

கர்த்தர் தந்த ஈவுக்காக
என்றென்றைக்கும் ஸ்தோத்திரம்!
விண்ணோர் மண்ணோர் கூட்டமாக,
பாடுவார் சங்கீர்த்தனம்

மீட்கப்பட்ட யாவராலும்
ஏக தேவனுக்கே
ஆராதனையாய் என்றைக்கும்
ஸ்தோத்திரம் உண்டாவதாக

ஆசீர்வாதம்

தேவனுடைய இரக்கமுள்ள கிருபைக்கும் பாதுகாப்புக்கும் உங்களை ஒப்புவிக்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்துக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள் மேல் பிரகாசிக்கப்பண்ணி உங்கள் மேல் கிருபையாய் இருக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள் மேல் பிரசன்னமாக்கி இப்பொழுதும் எப்பொழுதும் உங்களுக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் ஆமென்.

நிறைவு பாடல் **கீதம் : 40**

1. எல்லாருக்கும் மா உன்னதர்
கர்த்தாதி கர்த்தரே
மெய்யான தெய்வமனிதர்
நீர் வாழ்க, இயேசுவே

2. விண்ணில் பிரதானியான நீர்
பகைஞர்க்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்
நீர் வாழ்க இயேசுவே.

3. பிசாசு, பாவம் உலகை
உம் சாவால் மிதித்தே
ஜெயித்தடைந்தீர் வெற்றியை
நீர் வாழ்க, இயேசுவே.

4. நீர் வென்றபடி நாங்களும்
வென்றேறிப் போகவே
பரத்தில் செங்கோல் செலுத்தும்
நீர் வாழ்க, இயேசுவே

5. விண்ணோர்களோடு மண்ணுள்ளோர்
என்றைக்கும் வாழவே

பரம வாசல் திறந்தோர்
நீர் வாழ்க, இயேசுவே.

வரவேற்பு பாடல்

கீதம் : 196

பல்லவி :

தோத்திரம் செய்வேனே - ரட்சகனைத்
தோத்திரம் செய்வேனே

அனுபல்லவி :

பாத்திரமாக்க இம்மாத்ரம் கருணைவைத்த
பார்த்திபனை, யூதக் கோத்திரனை என்றும் - தோத்திரம்

சரணங்கள் :

1. அன்னை மரி சுதனை - புல் மீது
அமிழ்துக் கழுதவனை
முன்னணை மீதுற்ற, சின்னக் குமாரனை
முன்னுரை நூற்படி, இந்நிலத் துற்றோனை
- தோத்திரம்

2. கந்தை பொதிந்தவனை, - வானோர்களும்
வந்தடி பணிபவனை
மந்தையர்க் கானந்த மாட்சியளித்தோனை
மான பரன் என்னும் ஞான குணவானை - தோத்திரம்

3. செம்பொன் னுருவானைத் - தேசிகர்கள்
தேடும் குருவானை
அம்பர மேவிய உம்பர் கணத்தோடு
அன்பு பெற நின்று, பைம்பொன் மலர் தூவி
- தோத்திரம்



Praise the Lord

நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன்:
நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

சங்கீதம் 146 : 2

ருசியில் சிறந்தது

பென்னி

பெப்ஸி & ஜீஸி

எங்கள் தயாரிப்புகள்

பெப்சி ஐஸ், ரோஸ் மில்க்
மோர் மற்றும் ஆரஞ்ச்,
மேங்கோ, பைனாப்பிள், கிரேப்ஸ்

நவீன முறையில்
(RO SYSTEM, UV TREAT)
சுத்திகரிக்கப்பட்ட குடிநீரால் தயாரிக்கப்படுகிறது.

பென்னி பெப்ஸி
சந்தை முக்கு, ரெட்டியார்பட்டி ரோடு,
மேலப்பாளையம், திருநெல்வேலி.
9750158619, 04622351906

பென்னி பெப்ஸி,
பென்னி காம்பௌண்டு,
7/5 செண்பகத்தோப்பு ரோடு,
பெந்தேகோஸ்தே சர்ச் அருகில்
இராஜபாளையம்-626 117
விருதுநகர் மாவட்டம்.
போன் : 04563 220052, 222015, 9842122015

கிளைகள்: ஈரோடு, கோவை, சேலம், திருப்பூர், வேலூர்.

இஸ்வர்யா ஆப்செட் பிரிண்டர்ஸ்.சிவகாசி - 9943222582